
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



**வெளியிடுவோர்**

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. ஆளுநர் பேலிக்ஸ் முன்பாக பவுல் 1
2. தேவனுக்கு யார் கணக்கொப்புவிக்க வேண்டும்? 7
3. பெண்கள் பகுதி 10
4. நீங்கள் தேர்வு செய்யும் பங்கு எது 13
5. அந்நிய பாஷை பேசுதல் 15
6. தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தினான் 19
7. தேவனின் கட்டளைகள் 21
8. சத்தியம் உங்களை விடுதலையாக்கும் 25
9. கிறிஸ்தவம் தலைத்தோங்க தடையென்ன? 27

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 | MAY 1994 | Issue - 5


## ஆசிரியவுரை

### ஆளுநர் பேலிக்ஸ் முன்பாக பவுல்

புதிய ஏற்பாட்டில் மிகப் பிரபலமான மனிதனாகிய அப்போஸ்தலன் பவுல், தான் ஒரு விசாரணைக் கைதியாக ஆளுநர் பேலிக்ஸ் இடம் அனுப்பப்பட்ட பொழுது, அவர் முன்னிலையில் ஒரு மிகச் சிறந்த செய்தியைப் பிரசங்கித்தான். அப்போஸ்தலருடைய நடபடிகள் 24ம் அதிகாரம் 24 முதல் 26 வசனப் பகுதியில் நாம் அதைக் காண முடியும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்று முக்கியமான அம்சங்களை உள்ளடக்கிய, பொருள் செறிந்த, அச்செய்தியை ஆராயும் முன், அச்செய்தி கொடுக்க நேர்ந்த பின்னணியைக் கொஞ்சம் அலசுவோம்.

சபைச் சரித்திரத்தை வெளிப்படுத்தும் ஒரே நூலாகிய அப்போஸ்தருடைய நடபடிகளின் முற்பகுதியில் (1-12அதி) பேதுருவும், பிற்பகுதியில் (13-28) பவுலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். புற ஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்ற பெருநோக்கோடு, தேவனால் பிரத்தியட்சமாய்த் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம் தான் பவுல். அவனுடைய சிறப்புமிக்க கல்வி, (அப்.22:3) மார்க்க ரீதியான அவனுடைய அபாரப் பின்னணி (பிலிப். 3:5-6) அந்நாட்களில் அவனுக்கிருந்த மரியாதைக்குரிய ரோமப் பிரஜை என்ற அந்தஸ்து (அப்: 22:28) ஆகியவை அவனை அப்பணிக்கு முற்றிலும் தகுதிப்படுத்தியது.

பவுலடியார் தன்னுடைய ஊழிய நாட்களில் மூன்று சுவிசேஷப் பிரயாணங்களைப் பிரதானமாக மேற்கொண்டார். அவற்றில் மூன்றாம் நற்செய்திப் பிரயாணத்தில் இருந்தபொழுது தான், எருசலேம்

பட்டணத்துக்குத் திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார். (அப்.20:16) எபேசு பட்டணத்தில் மூன்றாண்டுகள் தங்கியிருந்து ஊழியத்தை முடித்துவிட்டு, மிலேத்து பட்டணத்தின் வழியாக தீரு பட்டணத் துறையில் வந்து இறங்கினார்கள் (21:3). ஆனால் அங்கு, எருசலேமுக்குப் போக வேண்டாமென்று பவுல் எச்சரிக்கப்படுகிறார். (21:4) தொடர்ந்து செசரியா பட்டணத்துக்கு வந்து, சுவிசேஷகனாகிய பிலிப்புவின் வீட்டில் தங்கியிருந்தபொழுது, அகபு என்னும் தீர்க்கதரிசியால், அதே எச்சரிப்பு செயல் விளக்க முறையில் கொடுக்கப்படுகிறது. (21 : 10, 11).

தேவனுடைய நாம மகிமைக்காக எதையும் சந்திக்கும் நெஞ்சுரம் கொண்ட பவுல் கொடுக்கப்பட்ட எச்சரிப்புகளைப் பற்றி கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல், தன்னுடைய இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறார். எருசலேம் பட்டணத்தை அடைந்து, மூப்பர்களின் ஆலோசனைப்படி, சுத்திகரிப்பின் நாட்களின் இறுதிக் கட்டத்தில் இருந்தபொழுது, ஆசியா நாட்டிலிருந்து வந்த மோசேயின் பிரமாணத்தில் வைராக்கியமுள்ள யூதர்களாலே சுற்றி வளைத்து பிடிக்கப்படுகிறான். (21:26,27) கலவரம் அதிகமாகி பவுல் படுகொலைக்கு ஆளாக இருந்த சமயத்தில், போர்ச்சேவகரின் சேனாபதிக்கு செய்தி போகிறது (21:31) சேனாபதியின் முயற்சியால் கொலை வெறிக் கும்பலின் நடுவிலிருந்து பவுல் அகற்றப்பட்டு கோட்டைக்குள் கொண்டு போகப்படுகிறார். (21:37) பிறகு ஒருமுறை, அதே சேனாபதியின் உத்திரவால் 'சவுக்கடி' பெற வேண்டிய நேரத்தில், ரோமப் பிரஜை என்ற அந்தஸ்து இருந்தபடியால், அதற்கும் தப்பித்துக் கொள்கிறான். (22:24-29).

மீண்டும், பவுல் பிரதான ஆசாரியர் மற்றும் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகக் கொண்டு வரப்படுகிறார். (அப். 23) அவர்கள் அவன் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருந்தனர். அவ்வேளையில், ஆலோசனைச் சங்கத்தில் பரிசேயரும், சதுசேயரும் இருக்கிறதை அறிந்து கொண்டு, தன்னுடைய புத்தி கூர்மையோடு கூடிய பேச்சாற்றலால் ஆலோசனைச் சங்கத்து உறுப்பினர்களுக் குள்ளேயே பிரிவினையை உண்டாக்கி அவர்கள், தங்களுக்குள் மோதிக் கொள்ளும்படியான நிலையை ஏற்படுத்துகிறான். (23:6,7) அதன் மூலம், மார்க்க விஷயங்களில் உயர் அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பு அவன் மீது எந்தவொரு "ஏகமனதான" தீர்மானமும் எடுக்க இயலாமல் போயிற்று. அங்கும் கலவரம் ஏற்படவே, கோட்டைக்குள் கொண்டு போகப்படுகிறார். (23:10)

இம்முறையும் பவுல், தங்களிடமிருந்து தப்பித்துக் கொண்டதை அறிந்த யூதர்கள் சிலர், பவுலைக் கொல்லு செய்யுமளவும், புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதமேற்கின்றனர். (23 : 12) இந்த மாபெரும் "கூட்டுச்சதியை" பவுலின் சகோதரியின் மகன் மூலம் அறிந்து கொண்ட சேனாபதி, தன் மீது பழி விழுந்துவிடும் என்று

எண்ணி, ஆளுநர் பேலிக்ஸ்க்கு நிருபம் கொடுத்து மிகுந்த பாதுகாப்பாக பவுலை அனுப்பி விடுகிறான். (23 : 22-

பவுலுக்கு எப்படியாவது தண்டனை வழங்கியே தீர வேண்டுமென்ற தீயநோக்கோடு, பிரதான ஆசாரியனாகிய அனனியாவும், மூப்பர்களும் செசரியா பட்டணத்துக்கு வருகிறார்கள். தங்களுக்காக வழக்காட, தெர்த்துல்லு என்னும் பேர்கொண்ட "சட்ட நிபுணன்" ஒருவனையும் அழைத்து வருகின்றனர். தெர்த்துல்லு தன்னுடைய வழக்காடும் திறனுக்கு மெருகேற்றி வாதிடுகிறான். ஆனால், பவுலோ கூலிக்கு ஆள் அமர்த்தாமல், தன்னுடைய வழக்கமான, தர்க்கரீதியான பேச்சால், தெர்த்துல்லுவின் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட பேலிக்ஸ், இந்த மார்க்கத்தின் காரியங்களை விவரமாய் அறிந்திருந்தபடியால் தீர்ப்பை உடனடியாகக் கூறாமல், சேனாபதி லீசியா வரும் வரை ஒத்திப் போட்டான். (24:22,23)

இந்த இடைவெளியில் தான், கவர்னர் பேலிக்ஸ் முன்னிலையில் மானிடத்திற்கு என்றென்றும் பயன்படும் ஒரு சிறந்த பிரசங்கத்தைச் செய்யும் வாய்ப்பைப் பெறுகிறார்.

ஆம், வழக்கை ஒத்திப்போட்ட சில நாட்களுக்குப் பிறகு, தான் "அசிசஸ்" என்ற வேறொரு இராஜாவிடமிருந்து திருடிக் கொண்ட மனைவியாகிய துருசில்லாளுடன், பளிங்குக் கற்கள் பரப்பப்பட்ட செசரியாவின் அரண்மனையில், கம்பீரமாக வந்து அமர்கிறான் பேலிக்ஸ். அரண்மனையின் கீழே காவல் பண்ணப்பட்டிருந்த பவுலை அழைத்துவர உத்திரவிடப்படுகிறது. சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க, அந்தச் சின்ன உருவம், சங்கிலிகள் பூட்டப்பட்ட நிலையில், மேலே ஏறி வந்து, சிம்மாசனத்தில் வீற்றிருந்த ஆளுநர் தம்பதிக்கு மரியாதை செலுத்துகிறது. பேசுவதற்கு உத்திரவு கிடைத்தவுடன், விளைவைப் பற்றி துளியும் கவலைப்படாமல், பிரசங்கிக்கத் தொடங்கினான் பவுல். அதுவும் எப்படி நேருக்கு நேர் பாவத்தைக் கண்டித்துப் பேசுகிறார். இன்றைக்கு எத்தனை ஊழியருக்கு, இந்த மனத் துணிவு உண்டு?

அந்நாளில், பவுல் செய்த மகாப்பிரசங்கம் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அவர் மூன்று முக்கியமான காரியங்களைக் குறித்துப் பேசியிருக்கிறார் என்பதை கீழ்க்கண்ட வசனம் எடுத்துச் சொல்கிறது. "அவன் **நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும்** குறித்துப் பேசினான். (அப் 24 : 25) சரி, இம்மூன்று காரியங்களைக் குறித்தும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

## 1. பவுல் நீதியைக் குறித்துப் பேசினான் :

"நீதி" என்றால் தேவனுடைய சித்தத்தின்படி செய்வதாகும். அதாவது, உலகத்தார் "ஒழுக்கம்" என்று சொல்கிறார்களே அதைக் காட்டிலும் மேலானது. "நீதி"யின் சிறப்பம்சமே தேவனுடைய

சித்தத்திற்குக் கீழ்ப்படிவது தான். தேவனுடைய வசனங்களின்படி செய்வது தான் நீதி. ஏனெனில், "தேவனுடைய கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்". (சங்கீதம் 119 : 172)

நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து யோர்தான் ஆற்றங்கரையில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது, தேவ நீதியை நிறைவேற்றும் படியாகத்தான். (மத் : 3 : 15) அவர் பாவம் செய்ததால் அல்ல. நூற்றுக்கதிபதியாகிய கொர்நெலியுவைப் போல ஒருவன் "ஒழுக்க சீலனாக" இருக்க முடியும். ஆனால், ஒருவன் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் பொழுது தான் "நீதிமானாக"மாற முடியும். (அப். *10, 11* அதி)

பவுல் நீதியைக் குறித்து பிரசங்கிக்கும் பொழுது, அவர் சிலுவையைக் குறித்து, அதன் மூலம் கிடைத்த நற்செய்தியைக் குறித்தே பிரசங்கித்திருப்பார். அவர்கள் மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டுவது அவசியம் என்றே பிரசங்கித்திருப்பார். (அப்.17:30, 10 : 48)

## 2. பவுல் இச்சையடக்கத்தைக் குறித்துப் பேசினான் :

'இச்சையடக்கம் என்றால் "தன்னடக்கம்". புலன்களை அடக்கி ஆளும் சக்தி. அதாவது, ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகும். இன்னொருவனுடைய மனைவியை வைத்திருந்த பேலிக்ஸ்க்கு இது மரண அடிநிலை குலைந்து போயிருப்பான். இன்றைக்கு எத்தனை ஊழியர்களால், தங்களுக்குத் தெரிந்த பெரிய மனிதர்களின் பாவங்களை தயங்காமல் சுட்டிக்காட்ட முடியும்?.

"இச்சையடக்கம்" ஆவியின் கனிகளில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. (கலா 5:23) தேவனுடைய நித்திய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க இச்சையடக்கம் மிகவும் அவசியமான ஒன்று. (பேது 1:5 - 11) மாம்ச இச்சைகளை சிலுவையில் அறைந்துவிட வேண்டும் என்றே பவுலடியார் கலாத்தியருக்கு எழுதும் பொழுது சொல்கிறார். (கலா 2 : 20) யாரொருவன் தேவனுக்குப் பயப்படுகிறானோ, வசனத்திற்கு பயந்து நடுங்கி கீழ்ப்படிகிறானோ அவனால் மட்டுமே இச்சையடக்கத்தில் வெற்றி பெற முடியும்.

## 3. பவுல் இனிவரும் நியாயத் தீர்ப்பைக் குறித்துப் பேசினான் :

நம்முடைய வாழ்க்கையில் இரண்டு காரியங்கள் மிகத் திட்டமானது. மரணம். மற்றொன்று நியாயத் தீர்ப்பு. "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி 9 :27) பவுல், பொதுவாக, தன்னுடைய பிரசங்கங்களை நியாயத் தீர்ப்போடு முடிப்பது தான்

வழக்கம். அதற்கு ஆதாரமாகக் கிறிஸ்துவின் உயிர்தெழுதலை எடுத்துக் காட்டுவார் (அப் 17 : 30, 31 1 கொரி. 15 : 12 -26)

இந்தக் கட்டத்தில், பவுல் பிரசங்கத்தின் உச்ச நிலைக்கு வந்துவிட்டான். தேவனுக்குப் பயப்படாத எல்லோர் மேலும், தேவக்கோபம் வரும் என்கிறான். தேசாதிபதியாகிய பேலிக்ஸே, நீரும், உமது துணைவியாரும் அதற்கு தப்பித்துக் கொள்ள முடியாது என்று அடித்துச் சொல்கிறார். ஆம், நியாயத் தீர்ப்புக்கு ஒருவரும் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை வேதவசனங்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறது. (1 பேது 4 : 17-19; 2 பேது 2 : 9 -14 2 தெச 1: 7 -9)

அனல்தெறிக்கும் பவுலின் செய்தியைக் கேட்ட பேலிக்ஸ் பயந்து நடுங்கினான். வசனங்கள் இருதயத்திற்குள் சென்றது. ஆனால் அவைகள் கிரியை செய்ய அவன் அனுமதிக்கவில்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் வாய்ப்புக்கு வெகு அருகாமையில் வந்தும், அதை உதாசீனப்படுத்தினான். "இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உங்களை அழைப்பிப்பேன்" என்றான். (24 : 25) ஆனால் அவன் மீண்டும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தான் என்று வேத வாக்கியங்கள் எங்குமே போதிப்பதில்லை. என்ன பரிதாபம் பாருங்கள்!

பேலிக்ஸ், கீழ்ப்படியாமல் போனதற்கு, கீழ்ப்படிதலை ஒத்திப் போட்டதற்கு காரணம் என்னவாய் இருக்க முடியும்? (1) தவறான முறையில் தனக்கு மனைவியாக்கிக் கொண்ட துருசில்லாளை அவனால் விடமுடியவில்லை. அவளோடு, அவன் நடத்தின உல்லாச வாழ்க்கையை விடமுடியவில்லை. இன்னும் கூட அநேகராகிய நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் வாய்ப்பைப் பெற்றும் பலவிதமான உலக உல்லாசங்களை விடமுடியாமல் "இரட்சிப்பை" தள்ளிப் போட்டுக் கொண்டுள்ளோம். (2) தேசாதிபதி என்ற அந்தஸ்தை, அதனால் கிடைக்கக் கூடிய உலக கௌரவத்தை விட்டுவிட்டு, தன்னை ஒரு 'கிறிஸ்தவன்' என்று அழைத்துக் கொள்ள அவனுக்கு மனமில்லை. இன்றைக்கும் பெரும்பாலான மக்களின் பிரச்னை அது தான். உலகக் கல்வி, சம்பத்து, பதவி, பட்டம் இவைகள் தான் பெரிது என நினைத்து, பரலோக பாக்கியத்தை துறந்து விடுகின்றனர்.

பேலிக்ஸ் மாத்திரமல்ல, இன்னும் இரண்டு பூமியின் அதிபதிகளும், பேலிக்ஸ் போலவே இரட்சிப்பை உதாசீனப்படுத்தினர். பேலிக்ஸ்க்கு பதிலாக தேசாதிபதி பொறுப்பை ஏற்ற பெஸ்து இவ்விதமாகச் சொல்கிறார். ". . . . பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்கு பைத்தியமுண்டாக்குகிறது என்றான்" (26 : 24). பவுல் திட்டமாய்ப் பேசின தேவனுடைய காரியங்கள் இவனுக்கு, பிதற்றலாகவும், பைத்தியக் காரத்தனமாகவும் தெரிந்தது. காரணம், பவுலின் செய்தி மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது என்று எண்ணினான். இன்னும், நற்செய்திக்குக் கீழ்படியும் பொன்னான வாய்ப்பை நழுவ விட்டவர்களில், அகிரிப்பா இராஜாவும்

ஒருவன். "அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி, நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்" (26 : 28). இந்தச் சந்தர்ப்பங்களைத் தவிர இவர்கள் மூவரும், சத்தியத்திற்கு மிக நெருக்கமாக ஒரு போதும் வந்திருக்க முடியாது. பரலோக பாக்கியத்தைக் கோட்டைவிட்ட, கோட்டையின் அதிபதிகள் இவர்கள், துர்பாக்கியசாலிகள்!

நண்பரே! இயேசுக் கிறிஸ்து பூமியில் இருந்த நாட்களில் மார்த்தாளிடம் சொல்வதைக் கவனியுங்கள். "தேவையானது ஒன்றே, மார்த்தாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" என்றார். (லூக் 10 : 42) உலக காரியங்களுக்காக இரட்சிப்பை ஒத்திப் போட்டவர்களின் வரிசையில் நீங்களும் ஒருவராகப் போகிறீர்களா? வேண்டாம். கிறிஸ்துவின் உபதேசத்தைக் கவனியங்கள்.'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் . . . " (மத் 6 : 33). சத்தியத்தின் அடிப்படையில் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, திருமுழுக்கு பெற்றுக் கொள்வதற்கு நாட்களை ஒத்திப் போட வேண்டாம். ஏனெனில் " . . . . இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்" ( 2 கொரி 6 : 2)

**EZS ராஜநாயகம்.**

## ஐயோ! ஐயோ!! ஐயோ!!!

**தாங்கள் மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற் போகு மட்டும் வீட்டோடே வீட்டைச் சேர்த்து வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ!**

**சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து இருட்டிப் போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ!**

**தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!**

**பரிதானத்துக்காக குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ!**

## தேவனுக்கு யார் கணக்கொப்புவிக்க வேண்டும்?

இவ்வுலகில், நாம் அநேகவற்றிற்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமென்பது நமக்குத் தெரியும். நம்முடைய பெற்றோர்கள், நாம் வேலை செய்யும் இடங்கள், நம்முடைய தேசத்தின் சட்டம், நம்முடைய அரசாங்கம் இவைகளெல்லாம் அவற்றுள் அடக்கம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

கணக்கொப்புவிப்பது என்றால், நம்முடைய நடத்தை, பேசும் பேச்சு, வாங்கியிருக்கும் கடன்கள், சட்டப்படி வரி கொடுத்தல் என்று இன்னும் இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதாகும். தேவனைப் பொறுத்தவரையில் நாம் நம்முடைய சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு கணக்கு கொடுக்க வேண்டும். பவுல் இவ்விதமாகச் சொல்கிறார். "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்". (ரோமர் 14 : 12) இதையே வேறுவிதமாக இவ்வாறு சொல்லலாம். ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயா சனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். (II கொரி: 5 : 10)

நாமெல்லாரும், தேவனுக்குக்கணக்கொப்புவிக்க வேண்டியவர்களென்று சொன்னாலும், "நாமெல்லாரும்" என்பது யாரையெல்லாம் உள்ளடக்கியது? இந்தச் சரீர வாழ்க்கையில் குழந்தைகளும் சிறுவர்களும் வரிச் செலுத்த வேண்டுமென்றோ, வேறு பல செயல்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்றோ எதிர்பார்க்கப் படுவதில்லை. ஒரு குழந்தை குற்றம் செய்தாலும் அக்குற்றம் மிகக் கடுமையானதாக இருந்தாலும் கூட அவர்களுடைய வயது மற்றும் அவர்களுடைய மனப்பக்குவம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, சட்டத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது. ஒரு குழந்தை, ஒரு கொலையே செய்திருந்தால் கூட, எந்த ஒரு நீதிமன்றமோ அல்லது நீதிபதியோ அக்குழந்தைக்கு மரண தண்டனை கொடுக்கமாட்டார்கள்.

ஆதாமுடைய பாவம் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையின் மீதும் இருக்கிறது என்று பெரும்பாலான பிரிவினைச் சபைகள் வாதிட்டாலும் வேதாகமம் அப்படிப் போதிப்பதில்லை. வியாதியானது பரம்பரையாக வருவதைப் போல் பாவமானது பரம்பரை பரம்பரையாக வரமுடியாது. வசனம் சொல்வதைக் கவனியுங்கள் "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்! குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை". (எசே 18 : 20) அப்படிச் சொல்வதின் பொருள், ஒவ்வொருவரும் தங்கள் செயலுக்குப் பொறுப்பாகிறார்கள்.

அப்படியானால் ஆதாமின் பாவம் என்னவாயிற்று? ஆதாம் தன்னுடைய தவறான செயலுக்குப் பொறுப்பாக்கப்பட்டான். அதைப் போலவே தான் ஏவாளும். அன்று முதல் ஒவ்வொருவரும் தங்கள் செயலுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் செய்த பாவங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமலே, நாம் செய்த அநேக பாவங்களுக்கு நாம் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஆதாமின் பாவத்தின் மூலமாக மரணம் உலகத்தில் உண்டானது, உண்மையே. மானிடத்தின் சரீர மரணத்திற்கு முழுக்காரணம் ஆதாமே. ஆனால் ஆவிக்குரிய மரணம் ஒரு குறிப்பிட்ட மனிதன் பாவமோ அல்லது தவறான செய்கையோ செய்யும் பொழுதுதான் ஏற்படுகிறது.

ரோமர் 3 : 23 ல் "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்று தானே சொல்கிறது என்கிறீர்களா? சொல்வது உண்மை தான். ஆனால் அந்த வசனத்தின் முன்னும் பின்னும் நீங்கள் வாசித்து பார்ப்பீர்களானால், பவுல் யாரைக் குறித்து அங்கே பேசுகிறார் என்பது விளங்கும். அவன் பாவிகள் என்று வர்ணிப்பது பொய்யர்களையும் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தைச் சிந்துபவர்களையும் தான். அதாவது பெரியவர்களைக் குறித்தே, நன்மை தீமை அறியக் கூடிய வயது வந்தவர்களைக் குறித்தே பேசுகிறான். அவர்கள் திட்டமாக நன்மை எது, தீமை எது அறிய முடியாத அளவுக்கு குழந்தைகளோ, சிறுவர்களோ அல்ல.

யாரெல்லாம் அவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைப் புரிந்து, கர்த்தரை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று தங்கள் வாயினால் அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்களோ, அவர்கள் தான் வேதவாக்கியங்களின்படி தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். (ரோமர் : 10 : 17 எபி, அப் = 17 : 30, மத் : 10 : 32 மாற்கு 16 : 16 மேற்கண்ட வசனங்களில் சொல்லியுள்ளபடி செய்யமுடியாத சிறுவர்கள், பாவிகள் அல்ல. அவர்கள் தேவனுடைய பார்வையில், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், பாவமற்றவர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் அவர்கள் எவ்விதமாகப் பேசப்பட்டுள்ளார்கள் எனக் கவனியுங்கள். நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று' மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் ( மத் : 18 : 3)

அப்படியானால், சிறு பிள்ளைகள் மிகவும் மோசமான செயல்களை சில சமயங்களில் செய்வதில்லையா? எனக் கேட்கலாம். அவர்கள் செய்கிறார்கள். ஆனால் அவைகள் பெரியவர்களைப் பார்த்து காப்பியடிப்பதன் விளைவு தான். அவன், தவற்றை வேண்டுமென்றே செய்யாதபடியினாலும், உலகிலுள்ள எந்தவொரு

நீதிமன்றமும் சிறுவர்களின் செயலுக்கு தண்டனை கொடுக்காத படியினாலும் கண்டிப்பாக, கர்த்தரும் அவர்களுடைய செயலுக்கு அவர்களைப் பொறுப்பாளியாக்கமாட்டார்.

இப்பொழுது ஒரு கேள்வி எழலாம். அப்போஸ்தலர் நடபடிகளில் மனமாற்றப் பட்டவர்களின் குடும்பங்கள் பற்றி கொர்நெலியு அவன் குடும்பம், லீதியாள் அவளுடைய குடும்பம், பிலிப்பிய ஜெயில் அதிகாரி அவனுடைய குடும்பம் என்று சில குடும்பங்கள், குடும்பத்தோடு கர்த்தருக்குள் கீழ்படிந்தார்களென்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அப்படிப்பட்ட குடும்பங்களில் கண்டிப்பாக குழந்தைகள் இருந்திருப்பார்கள். அவர்கள் தங்கள் சகோதரரோடும் சகோதரியோடும், பெற்றோர்களோடும் கர்த்தருக்குக் கீழ்படிந்திருக் கமாட்டார்களா? என்று எண்ணத் தோன்றும். குழந்தைகளும் சிறுவர்களும் அக்குடும்பங்களில் இருந்திருக்க மாட்டார்களென்று சொல்ல முடியாது. இருந்திருப்பார்கள். ஆனால், ஒரு குடும்பத்தில் கர்த்தருக்குக் கீழ்படிந்தவர்களைக் குறித்துச் சொல்லும்பொழுது கணக்கொப்புவிக்கும் தகுதி படைத்தவர்களைத் தான் சொல்லத் தேவையாயிருக்குமேயொழிய குழந்தைகளையும் சேர்த்தல்ல.

தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்காக வேறு யாரும் கீழ்படிந்திருக்க மாட்டார்கள். ஆகவே யாரெல்லாம் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்? என்ற கேள்விக்கு இது தான் பதில். நன்மை, தீமையை பிரித்து பார்க்க தெரிந்தவர்கள் தேவனுடைய சித்தத்தை புரிந்து கொள்ளும் வயதுவந்தவர்கள். தாங்கள் பாவிகளென்று உணரக் கூடியவர்கள் மற்றும் தங்கள் பாவங்களிலிருந்து விடுபட்டு, இரட்சிப்பைப் பெற, தேவனுக்குக் கீழ்படிய வேண்டிய தேவையிலிருப்போரே. குழந்தைகளும், சிறுவர்களும் நிச்சயமாகவே இந்த நிலையில் இல்லை என்பதை திட்டமாக ஒத்துக் கொள்வோம்.

நீங்கள் தேவனுக்குக் கீழ்படியக் கூடிய நிலையில் இருப்பவரா? இந்தக் கட்டுரையைப் படித்து இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நீர் புரிந்து கொண்டிருந்தால் நீங்கள் தேவனுக்குக் கீழ்படிய வேண்டியவர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஒரு வேளை நீங்கள் இதுகாறும் தேவனுக்குக் கீழ்படியாதவராக இருப்பீரானால், இப்பொழுது நீங்கள் கீழ்படிய வேண்டியது அவசியம். நீங்கள் இதுவரை இரட்சிப்பின் திட்டத்திற்குள் வராதவராக இருப்பீரானால் இப்பொழுதே கீழ்படிய உங்களை ஊக்கப்படுத்துகிறோம். இதை வாசிக்கின்ற நீங்கள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிய ஜெபிக்கிறோம். அதுவும் இப்பொழுதே கீழ்படிய ஜெபிக்கிறோம். கீழ்படியுங்கள். ஆசிர்வதிக் கப்படுங்கள்!

**J.C. சோட்.**

## பெண்கள் பகுதி

# "அவளுடைய பக்தியாலே"

பெண் என்பவள் மரியாதைக்குரியவளா? நாம் வாழும் இவ்வுலகில் இக்கேள்வியைக் கேட்டால், பலவிதமான பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும். சில கலாச்சாரத்தில் பெண்கள் சகலவற்றிற்கும் சுதந்திர வாளியாக உள்ளனர். குடும்பங்களே கூட பெண்களின் பெயராலே விளங்குகிறது. இன்னும் சில கலாச்சாரங்கள், பெண்ணின் திருமணத் திற்கு "வரதட்சணை" என்ற பெயரால் பெரும் பணம் செலவழிக்க வேண்டியிருப்பதால், பெற்றோர் களுக்கு அவர்கள் பாரமாகிவிடுகின்றனர். "கருக் கலைப்பு" என்ற கொலையை கூசாமல் செய்கின்றவர்களால், பாதிப்புக்கு உள்ளாவது பெரும் பாலும் பெண் குழந்தைகளே! இன்னும் சில இடங்களில் பெண் குழந்தைகளை பிறந்தவுடனேயே கொன்று விடுகின்றனர். ஏனெனில் அவர்களின் அடிப் படைத் தேவை களாகிய உணவு, உடை, கொடுத்து வாலிபப் பருவம் அடையும் பொழுது ஒழுங்காகத் திருமணம் செய்து கொடுக்க இயலாது என எண்ணுகின்றனர். சில மதங் களில் பெண்களுக்கு ஒரு உரிமையுமே கிடையாது என்று போதிக்கின்றனர். அதாவது ஒரு கணவன் தன் மனைவியை எந்தவொரு காரணமும் இல்லாம லேயே தான் அவளை "விவா கரத்து" செய்கிறேன் என்று கூற முடியும். பெண்களின் 'ஆன்மா முக்தி' அடைய முடியாது என்று வேறொரு மதம் கூறுகிறது.

ஆனால் மனுக்குலத்தில் பெண் என்பவள் இவ்வளவு தகுதியற்ற வளாகவா உள்ளாள்? ஒவ்வொரு ஆணும் தன் தன் மனைவியுடன் அவனுடைய வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளும் படியாகவே தேவன் திட்டம் வகுத்துள்ளார். தன்னுடைய இந்தத்திட்டம் அலட்சியம் பண்ணப்படுவதை தேவன் ஒரு போதும் விரும்பமாட்டார். கணவன் - மனைவி உறவு என்ற திட்டம் இல்லாதிருக்குமானால் மனுக்குலம் ஆதாமோடு மறைத்து போயிருக்கும்! பாவத்திற்கு பாதை திறந்து விட்டவள் ஏவாளாக இருந்த போதிலும், தேவன் அவளைக் கைவிட்டு விடவில்லை.

அவளுடைய வித்தின் மூலமாகத் தான் சாத்தானின் தலை நசுக்கப்படும் என்று வாக்குக் கொடுத்தார் (ஆதி 3 : 15). இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பின் மூலம் இது சாத்தியமாயிற்று. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன், ஆனால் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர். (கலாத்தியர் 4 : 5) தேவன் விரும்பியிருந்தால், உலக மீட்பரை வேறு ஏதாவது ஒரு வகையில் உலகுக்குக் கொண்டு வந்திருக் கலாம். ஆனால் அவர் ஒரு பெண்ணைக் கனப்படுத்த விரும் பினார். ஆம், ஒரு குழந்தையைப் பெற்று, வளர்க்கும் படியான சிலாக்கியத்தை நாசரேத்தை சேர்த்த மரியாளுக்குக் கொடுத்தார். நடக்க இருக்கும் காரியங்களைப் பற்றி, காபிரியேல் தூதன் மரியாளிடம் பேசுகையில், "கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசிர்வதிக்கப்பட்டவள்" என்றான். தேவனுடைய செய்தியை, பூலோ கத்தில் கிறிஸ்து பிரசங்கித்த நாட்களில்,

அவரோடு பிரயாணம் சென்ற விசுவாசிகளில் பெண்களும் பங்கு வகிக்கும் படியான சிலாக்கியத்தைப் பெற்றனர். (லூக் 8 : 1 -3) தான் மரணத்தை வென்று உயிரோ டெழுந்தபொழுது, முதன் முதலாக ஒரு பெண்ணுக்குத்தான் தரிசனமானார். அதுமாத்திரமல்ல தான் உயிரோடி யிருக்கிறதான செய்தியை சீஷர்களுக்குச் சொல்லும்படியான வாய்ப்பையும் ஒரு பெண்ணுக்குத் தான் கொடுத்தார். (யோவான் 20 : 11 - 18). தன்னிடத்தில் வருகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இரட்சிப்பு என்றுதான் வாக்குக் கொடுத்தாரே தவிர-ஆண், பெண் என்று பாகுபடுத்தவில்லை. (மத்தேயு 24: 40, 41).

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் (மத் 11 : 28).

தங்கள் செல்வாக்கு குறைவானதென்றும், தேவன் மீது தங்களுக்கிருக்கும் அன்பு, பக்தி இவைகளெல்லாம் ஒரு பொருட்டே அல்ல என்றும் பெண்கள் அடிக்கடி நினைக்கின்றனர். பொதுவாக பெண்கள் ஆராதனையை வழி நடத்துவதில்லை. பெண்கள் போதிப்பதில்லை. அப்படியானால் தங்களுக் கிருக்கும் பக்தியை வெளிக்காட்ட அவர்கள் என்ன செய்ய முடியும்? எப்படி, அவளுடைய வாழ்க்கையை வேறு படுத்திக் காட்ட முடியும்?

எனக்கு ஒரு கிறிஸ்தவப் பெண்ணைத் தெரியும். அவர்கள் கல்லூரிக்குச் சென்றதில்லை. அவர்கள் ஒரு எழுத்தாளரும் அல்ல. சில சந்தர்ப்பங்களில், சில பெண் களுக்கும், குழந்தை களுக்கும் போதித் திருக்கிறார்கள். ஊழியத் தினிமித்தம் எந்தவொரு பிரயா ணமும் மேற் கொண்டதில்லை.

அப்படியானால் அவர்கள் என்னதான் செய்தார்கள்? கிட்டத்தட்ட 60 ஆண்டுகால குடும்ப வாழ்வில், தேவனுக்கு உகந்த பிள்ளையாக ஜீவித்தார்கள். அவளுடைய ஆவிக்குரிய பெலன், அவளுடைய கண வனின் ஆவிக் குரிய பெலனாக இருந்தது. தன்னுடைய விசுவாசத்தின் மூலம் குழந்தைகளுக்கு, குடும்பத்தை, வீட்டை ஒரு குட்டிப் பரலோகம் போல மாற்றினாள். அவளுடைய தனிப்பட்ட முயற்சியின் பலனாக அநேகப் பெண்கள் சுவிசேஷத்தை அறிந்து கொள்ளவும், கிறிஸ்தவர்களாக மாறவும் முடிந்தது. அவள் தன்னுடைய விசுவாசத்தை தன் பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, பிள்ளைகளின் பிள்ளை களுக்கும் ஊட்டி செயல் பாடுள்ள கிறிஸ்தவர்களாக வளர்த்தாள்.

அவளுடைய பிள்ளைகளுக் குள்ளாக ஒரு ஊழியக் குடும்பம் எழும்பிற்று. அக்குடும்பம் அந்நிய மண்ணில் 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி கர்த்தருடைய சபையைக் கட்டியது. அவர்கள் அந்நாட்டில் வானொலியின் மூலமும், இலக்கியப் பணி மூலமும் சத்தி யத்தைப் பரப்பினார்கள். அமெரிக்கச் சகோதரர்களின் உதவியாலும் வெளி நாட்டிலுள்ள, வானொலிப் பிரசங் கியர் மற்றும் பத்திரிக்கை ஆசிரியர் உதவியாலும், பல கர்த்தருடைய சபைகள் உருவாகவும், அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும் அக்குடும்பம் உதவினர். அவர் களுடைய கூட்டு முயற்சியால் சத்தியம் என்னும் விதையானது அந்நாட்டின் பெரும் பாலான இடங்களில் விதைக் கப்பட்டது.

ஆகவே, கிறிஸ்தவப் பெண்களே! உங்கள் தேவ பக்தியிலே உறுதியாயிருங்கள். களிமண்ணைப் போல, மென்மைத்

தன்மையுடைய குழந்தைகள் உங்கள் கரங்களில் கொடுக்கப் பட்டுள்ளார்கள். அக்குழந் தைகளை எப்படி வனையப் போகிறீர்கள்? அவர்களுடைய செல்வாக்கு எந்த வகையில் பரவுவதற்கு உதவி செய்யப் போகிறீர்கள்? இந்தக் கேள்விக் கான பதில் உங்களுடைய விசுவாச உறுதியை அடிப் படையாக வைத்துத்தான் உள்ளது. வேதவாக்கியங்களை முறை யாகப் படிப்பதன் மூலமும், தேவனுக்கு நம்முடைய வாழ்க் கையில் முக்கிய மான இடத்தைக் கொடுப்பதின் மூலமும், நம்மால் நேசிக்கப் படுபவர்களின் இருதயங்களில் சத்தியத்தையும், விசுவாசத்தையும் வேரூன்றச் செய்யமுடியும். இதைவிடச் சிறந்ததொரு வாழ்க்கை இல்லை. இல்லவே இல்லை.

**B.B.CHOATE R.R. NAYAGAM.**

## பவுலுடைய எழுத்துக்களில் மிளிரும் நம்பிக்கையைப் பாருங்கள்!

1) "என்னைப் பெலபடுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற் றையும் செய்ய எனக்கு பெலனுண்டு." (பிலிப் 4 : 13)

2) "கிறிஸ்துவின் சுவிசேஷத் தைக் குறித்து நான் வெட்கப் படேன்.... அது தேவ பெலனாயிருக்கிறது." (ரோம 1 : 16)

3) "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்." (தீமுத் II 4 : 7)

4) "......நான் நல்மனசாட்சி யோடே தேவனுக்கு முன் பாக நடந்து கொண்டேன்." (அப். 23 : 1)

5) ".... நான் வெட்கப்படுகிற தில்லை, ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன் னாரென்று அறிவேன்." (தீமுத் II 1 : 12)

6) ".... ஏனென்றால் நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது." (தீமுத் II 4 : 6)

## நீங்கள் தேர்வு செய்யும் பங்கு எது?

லூக்கா 10.ம் அதிகாரத்தில் இரு சகோதரிகள் பற்றிய ஒரு கதையை நாம் படிக்கிறோம். மரியாள், மார்த்தாள் என்பது அவர்களின் பெயர்கள். மார்த்தாளின் அழைப்பை ஏற்று, இச்சகோதரிகளின் வீட்டுக்கு இயேசு வந்தார். வீட்டில் வந்து அவர் அமர்ந்த போது மரியாள் "இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்" என்பதாக வசனம் நமக்குக் கூறுகிறது. ஆசிரியர்களின் பாதங்களின் அருகில் மாணவர்கள் அமருவது அக்காலத்தில் பழக்கமாக இருந்தது. யாராவது கதை சொல்லும் போது அவர்கள் காலடியில் சிறுவர்கள் அமர்ந்து இன்று கேட்பதில்லையா? அது போல இயேசுவிடமிருந்து வரும் சத்தியத்தை அறிந்து கொள்ளும் ஆவலுள்ள மரியாளிடம் இத்தகைய குழந்தைத்தனமான உற்சாகத்தை நாம் காண்கிறோம்.

அவளுடைய சகோதரி மார்த்தாளையோ ஒரு வித்தியாசமான கோணத்தில் நாம் பார்க்கிறோம். மார்த்தாள் அநேக காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள். அவள் செய்ய நினைத்த ஊழியம் பற்றி கலைந்த மனதுள்ளவளாகக் காணப்பட்டாள். இயேசுவுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென அவள் நிச்சயமாக நினைத்தாள். வீட்டுக் காரியங்களெல்லாம் இப்படி இப்படி நடக்க வேண்டுமென அவள் நினைத்திருக்கக் கூடும். இருந்த போதிலும், இயேசுவைப் பொறுத்த வரையில் அது முக்கியமான காரியமாகக் காணப்படவில்லை. இயேசு அவளை நோக்கி மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்.

உங்கள் நிலை என்ன நண்பரே? அநேக காரியங்களைக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா? தேவனுடைய ஊழியத்திற்கு முன்பாக, ஆவிக்குரிய காரியங்களுக்கு முன்பாக நீங்கள் உலக காரியங்களுக்கு முக்கியத்துவம் தருகிறீர்களா? தேவனுடைய வசனம் இதைப் பற்றி நம்மை எச்சரிப்பதைக் கேளுங்கள். "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1. யோவான் 2: 15 -17)

*நாம் நல்ல பங்கை தேர்ந்தெடுக்க மறந்து, உலக காரியங்களில் ஆழ்ந்து போய் விடலாகாது. மரியாளைப் பின்பற்றி நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்து இயேசுவுக்குக் கீழ்படிவோம். நீங்கள் மரியாளா? அல்லது மார்தாளா?*

Aaron B.Mc.Donald **தமிழில் : எஸ்.எஸ்.ராஜன்**

## தேவனின் கட்டளைகள் ஐந்து

நீதி.7 : 1 5

1. என் மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.
2. என் கட்டளைகளையும், என் போதகத்தையும் உன் கண்மணியைப் போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.
3. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்.
4. இச்சக வார்த்தகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கி காப்பதற்காக.
5. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப் பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக.

# அந்நிய பாஷை பேசுதல்

மதப்பற்றுள்ள நம்மில் அநேகர் அந்நிய பாஷையில் அல்லது, அந்நிய மொழியில் பேசுவதாகக் கூறுகின்றனர். தேவனுடைய ஆவியானவர் தங்கள் மூலமாக பேசுவதாக விளக்கம் கூறுகின்றனர். மேலும் அவர்கள் தாங்கள் பேசுவது தங்களுக்கே தெரியாது என்றும், கேட்பவர்களும் புரிந்து கொள்ள முடியாது என்றும், தேவன் மட்டும் அறிவார் என்றும் சொல்லுகின்றனர். ஆனால் வேதாகமம் எங்கும் இப்படிக் கூறுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் அந்நிய மொழியில் பேசுவதில்லை. தங்களையே வஞ்சிக்கிறார்கள். மொழியைப் பேசாமல் ஒரு வித விநோதமான சப்தத்தை எழுப்பி, பிதற்றுவதைப் போல் செயல்படுகிறார்கள். வேதாகமம் அந்நிய மொழியைப் பற்றி பேசி இருப்பது உண்மைதான் (1 கொரி 14 : 2). அதிலும் பேசுகிறவன், தான் என்ன கூறுகிறேன் என்று அறிந்து இருந்தான். அதைக் கேட்பவர்கள் தான் புரியாமல் இருந்தனர். ஆகவே அவனுக்கு மாத்திரம் தெரிந்திருப்பதினால் மற்றவர்களுக்கு பிரயோஜனமில்லை. இதன் பலனாக, அப்படிப்பட்டவன் தேவனிடத்தில் பேசுகிறவனாயிருந்தான். அவனுக்கு பக்தி விருத்திக் கேதுவாக இருந்தது. ஆனால் கேட்பவர்களுக்கு ஒன்றும் புரியாததினால், அர்த்தமற்றதாக இருந்தது. (1 கொரிந்தியர் 14 : 4).

"அந்நிய பாஷை" என்று குறிப்பிடப்பட்டிருப்பது, புரிந்து கொள்ளக்கூடிய வார்த்தைகளை சுட்டி காட்டுகிறது. ஏனெனில், பவுல் கூறும் பொழுது, "அது போல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே" (1 கொரிந்தியர் 14:9) என்றார். தொடர்ந்து பவுல் கூறுவது, என்னத்தினாலெனில் நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1 கொரிந்தியர் 14 : 14, 15). அந்நிய பாஷை என்பது இங்கு, கேட்பவர்களுக்கு தெரியாத, அந்நிய மொழி என்று பார்க்கிறோம். ஆகையினால் தான் பவுல் கேட்பவர்கள் புரிந்து கொள்ளுமளவு கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன், அப்படியே கருத்தோடும் பாடுவேன் என்றார்.

பவுல் அந்நிய பாஷையைப் பற்றி பேசும் பொழுது, மொழிகளைப் பற்றிக் கூறுகிறார். இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு

ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே. நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய் ஆகிலும் மற்றவன் பக்தி விருத்தியடைய மாட்டானே. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்" (1 கொரிந்தியர் 14 : 16 -19). தொடர்ந்து "மறு பாஷைக்காரராலும் மறு உதடுகளாலுமிந்த ஜனங்களிடத்தில் பேசுவேன். ஆகிலும் அவர்கள் எனக்குச் செவி கொடுப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே. அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்க தரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது (1 கொரிந்தியர் 14 : 21, 22).

மேலும் 27ம் வசனத்தில் கூறுகிறார், "யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராயப் பேசவும் ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ்சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசக்கடவன்" என்றார். அந்நிய பாஷை எனப்படுவது கல்லாத நேயர்களுக்கு, தெரியாத பாஷை. ஆகையினால், யாராவது அந்நிய பாஷையிலேயே பேசுகிறதுண்டானால், ஒவ்வொருவராக பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். அதாவது, தங்களுடைய தனிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்க கடவன்.

இப்பொழுது யாருக்கு அந்நிய பாஷை பேச வல்லமை உண்டு என்று பார்ப்போம். இது அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை கர்த்தர் அவர்களுக்கு வாக்குத் தத்தம் செய்திருந்தார். அதற்கு அடையாளமாக அவர்கள் அந்நிய பாஷை பேசினார்கள் (அப். 2 : 6). கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர். ஏனெனில் புறஜாதியினரும் யூதர்களைப் போல தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் என்று காண்பிக்க. பிறகு அவர்கள் அந்நிய பாஷை பேசினார்கள் (அப். 19). அதன் பிறகு, அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை யார் மீது வைக்கிறார்களோ, அவர்களுக்கும் பரிசுத்த ஆவி அருளப்பட்டு, அவர்களும் அந்நிய பாஷை பேசினார்கள். (அப்போஸ்தலர் 19 : 1 -7). இவர்களைத் தவிர வேறு யாருக்கேனும் இந்த வல்லமை கொடுக்கப்பட்டதா? இல்லை. வேதாகமத்தில் வேறு

எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஏன், இவர்களுக்கு மாத்திரம் இவ்வல்லமை கொடுக்கப்பட்டிருந்தது? உலகத்தின் பல பாகங்களுக்கு சென்று, மக்களுக்கு அவரவர்கள் சொந்த பாஷையிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இது கொடுக்கப்பட்டது. எவ்வளவு காலம் இந்த வாக்குத்தத்தம் இருந்தது? புதிய ஏற்பாடு எழுதப்பட்டு புத்தக உருவத்தில் உலக மக்களுக்கு அளிக்கப்படும் வரை, "அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம்". என்றார் பவுல் ( 1 கொரிந்தியர் 13: 8 - 10 ; யாக்கோபு 1; 25). இன்று அந்நிய பாஷை பேசும் வல்லமை யாருக்கும் கிடையாது. ஏனெனில் அதற்கு அவசியம் இல்லை. வேதாகமம், உலகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அந்நிய பாஷை பேசுகிறோம் என்று கூறிக் கொள்பவர்களும் கூட, அநேக காரியங்களை புரிந்து கொள்வதில்லை.

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இவர்களுக்கு வாக்குத் தத்தம் பண்ணப்படவில்லை.
2. அப்போஸ்தலர்கள், தங்கள் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியின் வரத்தை கொடுப்பதற்கும், இன்று அப்போஸ்தலர்கள் யாரும் உயிரோடு இல்லை. ஆகவே யாரும் இன்று அப்படிப்பட்ட வரத்தை பெற்றிருக்க முடியாது.
3. அந்நிய பாஷையில் பேசுதல், என்றுமே மற்ற மொழியில் பேசுவதைக் குறிப்பிடும்.
4. அந்நிய பாஷை பேசுதல் அவிசுவாசிகளுக்கு அடையாளம். ஆனால் இன்று சபையில் விசுவாசிகள் முன்னிலையில் மாத்திரம் செயல்படுகிறார்கள்.
5. இன்று, அந்நிய பாஷை பேசுபவர்களுக்கும் தாங்கள் பேசுவது என்ன என்று புரியாமல், அதை கேட்பவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை என்றால், தேவனுக்கு தெரிந்திருக்கும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? புதிய ஏற்பாட்டின் காலத்தில் இம்மாதிரி இருக்கவில்லை. உண்மையிலே இன்று அப்படிப்பட்ட வல்லமை யாரிடத்திலும் இல்லை.
6. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷை பேசிய விதமாய், இன்று அந்நிய பாஷை பேசமுடியும் என்று சொல்லுகிறவர்களால் பேச முடிவதில்லை. அப்படிப்பட்டவர்களுடைய பிரசித்தி பெற்ற பிரசங்கிமார்கள் இந்தியாவுக்கு வந்தால், மற்றவர்களைப்போல, தாங்களும் மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொண்டே பிரசங்கம் செய்கிறார்கள். அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சிலர் கூறுபவர்கள், புதிய ஏற்பாட்டில் அந்நிய பாஷை பேசப்பட்டதைப் போல் செயல்பட முடிவதில்லை.

அப்படி என்றால் அனேகர் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். நீங்கள் வேதாகமத்தைப் படித்து, இதைக் குறித்த சத்தியங்களை அறிந்து கொள்ள வேண்டுமாய் உங்களை வேண்டுகிறோம். அந்நிய பாஷை பேசும் வரங்கள் இன்றும் நமக்கும் உண்டு என்று எண்ணி ஏமாறாதீர்கள். மற்றவர்களால் ஏமாற்றப்படவும் விட்டுக் கொடுக்காதீர்கள்.

(J.C. சோட்)

## அந்நிய பாஷை புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருந்தது

அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே வந்திருந்த விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப் பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப். 10 : 45, 46.

## தாவீதின் ஜெபம்

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களைமகிழ்ச்சியாக்கும்.

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக,

எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும் ஆம் எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

# "தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தினான்"

யோனத்தானுடைய தகப்பனாகிய சவுல் அரசன், தாவீதைக் கொலை செய்ய முயன்று கொண்டிருந்த போதும், யோனத்தான், தாவீது ஆகியோரின் நட்பு உயிருக்குயிராகத் தொடர்ந்து நீடித்தது. தனது பாதுகாப்பிற்காக, சீப் மலையடி வாரத்திலுள்ள காடுகளில் தாவீது தங்கி இருந்தான். இந்த சந்தர்ப்பத்தில், I.சாமுவேல் 23:16-ம் வசனம் நமக்குக் கூறுவதைப் பார்ப்போம்.

அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய் தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தினான். கிறிஸ்தவர்களாகிய நமது அந்நியோன்யமானது, தேவனுக்குள் மேற்சொன்ன உறவுக்கு இணையாகுமா? இணையாக வேண்டும். ஒருவருக்கொருவர் அக்கறை கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். (I.கொரி12.25) ஒருவரை ஒருவர் அந்நியோன்யத்தில் பலப் படுத்துவதை எப்போதும் விரும்ப வேண்டும். (ரோமர் 14 : 19). ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பவர்களாக இருக்க வேண்டும். (கலா 6 : 2)

தேவனில் ஒருவரை ஒருவர் பலப்படுத்த நிறைய வழிகள் உண்டு. பிறர் நற்கிரியைகள் செய்வதைக் காணும் போது அவற்றை பாராட்டலாம். மனம் நொந்து போனவர்களை நமது வார்த்தையாலும் கிரியையாலும் தேற்றலாம். தேவனுடைய காரியங்களை நிறை வேற்றுவதில் அலட்சியமாக இருப் போரைக் 'கண்டித்து' தேவனுக்கு அதிக வாஞ்சையுடன் ஊழியஞ் செய்ய வைக்கலாம். அதாவது எபிரெயர் 10 : 24-ம் வசனத்தில் கூறப்படுவதைப் போல ஒருவருக்கொருவர் பலப்படுத்தலாம். "மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை ஒருவர் கவனித்து . . . ." உதாரணமாக, புதிய அல்லது பலவீனமான அங்கத்தினர்களை ஆராதனையில் தவறாது கலந்து கொள்ள உற்சாகப்படுத்துவது. மேற் சொன்ன வசனம் குறிப்பிடுவது இச்செயலையே. ஏனெனில் தொடர்ந்து வரும் வசனத்தைப் பாருங்கள்.

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுவதைப் போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்". பிறரை பலப்படுத்தி வேண்டுமானால் சில வேளை களில் அவர்களை சரியான முறையில் திருத்தவோ அல்லது தேவனிடத்தில் மீண்டும் சேர்க்க வோ வேண்டி வரும். (கலா 6 : 1 வசனம் பார்க்க) கிறிஸ்துவின் சரீரத்தைப் பலப்படுத்தவும் தளரும் உறுப்பினரை மீட்டுக் கொண்டு வரவும் சில வேளைகளில் உறுப்பினரின் அந்நியோன்னியத் தை விட்டு விலகும்படியான கடின நடவடிக்கை எடுத்தாலும் அது சரியானதாகவே இருக்கும். II.தெச 3 : 5, 14, 15) முன் மாதிரியான வாழ்வை நாமே வாழ்ந்து காட்டுவது தேவனிடத்தில் பிறரைப் பலப்படுத்தும் முக்கிய மான வழியாகும்.

தேவனிடத்தில் பிறரை உறுதியாகப் பலப்படுத்த, அவர்களை நாம் நன்றாக புரிந்து ()காள்ள வேண்டும். இதற்கு,

சிறிது நேரமும் முயற்சியும் தேவைப்படும். ஏனெனில் அவர்களை நமது இல்லங்களுக்கு அழைக்க வேண்டும். நாமும் அவர்களது இல்லங்களுக்கு செல்ல வேண்டும். சபையின் ஒவ்வொரு உறுப்பின ரோடும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் நெருங்கிப் பழகிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஞானஸ் நானத்தின் வழியோ அல்லது பிற இடத்திலிருந்து புதிதாகவோ சபைக்கு வரும் புதிய உறுப்பினர் களிடத்தில் உடனே பழகிக் கொள்ள வேண்டும். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது சபை உறுப்பினர்கள் மிகவும் நெருக்கமாகி விடுகின்றனர். பிறருடன் நெருக்கமாக இருக்கும் உறுப் பினர்களே, தேவனுக்குள் அவர்கள் கரங்களைத் திடப் படுத்த முடியும். இதை செய்ய நாம் எல்லோரும் முயன்று பார்க்கலாமே!.

**Joe E. Galloway.**

*எஸ்.எஸ்.ராஜன்*

## ஒரு கிறிஸ்தவத் தகப்பன்....

1) தன்னுடைய வாழ்க்கையில், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுவார். அதை தன் குடும்பத்தாருக்கும் போதிப்பார் (மத். 6 : 33)

2) தன்னுடைய குழந்தை களுக்கு அன்பு, மரியாதை, கீழ்ப்படிதல் ஆகியவற்றைப் போதிப்பார்.

3) தன்னுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய மற்றும் சரீரப் பிரகாரமான தேவை களைச் சந்திப்பார்.

4) மற்றவர்களுடனான தன்னு டைய எல்லாக் காரியங் களிலும் நேர்மையாகவே நடந்து கொள்வார்.

5) வாரத்தின் முதல் நாளை தன்னுடைய குடும்பத்தோடு சேர்ந்து ஆராதனைக்குச் செல்ல ஒதுக்கி விடுவார் (மத் 10 : 25)

6) ஒரு கிறிஸ்தவ தகப்பனுக்கு புறம்பான வகையில் நடந்து கொள்ள மாட்டார்.

# தேவனின் கட்டளைகள்

"ஒருவன் தன்னை தீர்க்கதரிசி என்றாவது ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக் கொள்ளக் கடவன்" ( 1 கொரி 14 : 37)

கள்ளப் போதகர்களை அடையாளங் காட்டும் அளவு கோலாக அப்போஸ்தலன் பவுல் அறிவுறுத்தும் வசனப் பகுதியே மேலே காணப்படுவது. அப்போஸ்தலருடைய உபதேசத்துக்கு மாறுபட்டவைகளைப் போதித்தவர்கள் கள்ளப் போதகர்களாக இருந்தனர். பவுல் காலத்திலேயே பல கள்ளப் போதகர்கள் இருந்தனர். எனவே தான்,"ஒருவன் தன்னை தீர்க்கதரிசி என்றாவது ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணிக் கொண்டு" அதே சமயம் தேவனுடைய அதிகாரத்தின் பேரில் பவுல் பேசுவதை ஏற்க மறுப்பவன் கள்ளப் போதகனாக இருக்கிறான் என பவுல் எழுத வேண்டியதாயிற்று. பவுல் எழுதியவையோ, பேசியவையோ பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய செய்திகள் என எற்றுக் கொள்ள மறுத்த எல்லா போதகர்களும் கள்ளப் போதகர்களே. இன்றுள்ள நிலைக்கும் இக்கூற்று பொருந்தும். அப்போஸ்தலன் பவுல் தனது சொந்த அபிப்பிராயங்களையோ, கற்பனைக் கதைகளையோ, கனவில் கண்டவற்றையோ வேதாகமத்தில் எழுதி வைக்கவில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அவருக்கு அளிக்கப்பட்ட தேவனுடைய சத்தியங்களை மட்டுமே அவர் எழுதினார். (2 தீமோ 3 : 15 -17; 1 கொரி 2 : 9 -16) ஆம் தேவனுடைய கட்டளைகள் அதிகாரம் படைத்தவைகள்; மனிதன் ஒதுக்கித் தள்ளக் கூடிய, முக்கியத்துவமற்ற எந்த கட்டளைகளையும் தேவன் தரவில்லை. (கலா 1 : 6 -9; எபிரே 5 : 8, 9)

நாம் சோதித்துப் பார்த்தால், எண்ணற்ற மனிதக் கற்பனைகள் (கட்டளைகள்) இடம் பெற்றிருப்பதை இனங்காண முடியும். (மத் 15 : 9) தேவனுடைய கட்டளைகளை செயலாற்றதாக்கி விடும் மனிதக் கட்டளைகள் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள மாற்கு எழுதிய சுவிசேஷம் 7ம் அதிகாரம் 6 முதல் 13 வசனங்களை நாம் படித்துப் பார்ப்பது அவசியம். தேவனுடைய கட்டளைகளை விட மனிதனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவதே சரி என செயல்படும் இலட்சக்கணக்கான மக்களை நாம் இன்று காண்பது உண்மையே. சகல வேதாகமப் போதகர்களும் ஆசிரியர்களும் 2 தீமோத்தேயு 4: 1 -5 வசனப் பகுதிகளை தங்கள் மனதில் பதித்து வைத்துக் கொள்ள நாம் விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்நாட்களிலே நம்மீது திணிக்கப்படும் மனிதக் கற்பனைகள் எண்ணற்றவை. அவற்றில் இதோ சில : நாம் விரும்பும் ஏதாவது ஒரு சபையில் அங்கத்தினராக இருக்கலாம். இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும். 'தண்ணீர் தெளித்து, அல்லது ஊற்றி, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம கொடுத்தாலும் தவறில்லை. இவையாவும் வேதாகமத்தில் காணப்படாத, இடைச் செருகலான மனிதக் கட்டளைகள்.

இயேசு கிறிஸ்து ஒரு புதுக்கட்டளையைத் தந்தார். அதாவது, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள்ளுவார்கள் என்றார்", (யோவான் 13:34, 35). இயேசு நம்மை நேசித்தது போல, நாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்ட வேண்டும் என்பதே மேலே குறிப்பிட்ட வசனப்பகுதியின் சாராம்சமாகும். எவ்வித நிபந்தனையுமின்றி, முற்றிலுமாக இயேசு நம்மீது அன்பு செலுத்தினார். அதே போன்று நாமும் பிறரில் அன்பு செலுத்த வேண்டும் சரியான முறையில் இதை செயலாக்கும் வழி இதோ; "உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும் நீங்கள் ஒருவராலொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்". (கலாத் 5 : 14 -15). சங்கீதம் 15 : 1 -5 வசனப்பகுதிகளையும் தயவு செய்து படித்துப் பாருங்கள். "மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்பிகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்". (மத். 7 : 12) என்ற தங்கச் சட்டத்தை எப்பொழுதும் கடைபிடியுங்கள்."நீங்கள் புறப்பட்டுப் போய் . . . . . . உலகம் முழுவதும் நற்செய்தியை அறிவியுங்கள்" (மத். 28: 18-20) என்பது தேவனுடைய மற்றுமோர் கட்டளையாகும். நமது முதற் கடமை என்ன என்று இங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. சபையானது தேவனுடைய சத்தியத்தின் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது. (அப். 8:4; எபே. 3 ;9-11; 1 தீமோ 3 : 14 -15). வீழ்ந்து போனவர்களை மீட்கவல்ல தேவனின் ஆயுதம் அவருடயை நற்செய்தியாகும். (ரோமர் 1 ; 16). தேவனின் நற்செய்தியை (சுவிசேஷம்) சகலருக்கும் அறிவிக்கும் நமது கடமையிலிருந்து நாம் தவறினால் இரட்சிக்கப்படவிருந்தோரின் இந்தப் பழிக்கு நாம் தப்ப முடியாது என்பது திண்ணம். (அப் 20:26,27; எசேக் 33:11, 31 -33).

அவருடைய வார்த்தையை நாம் விசுவாசிக்க வேண்டுமென தேவன் கட்டளையிடுகிறார். "நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க

வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது" (1யோவான் 3 : 23) "விசுவாசியாத எவனும் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி 11 : 6) ஆனால், "விசுவாசம்" தேவனுடைய பரிசுத்தமான வார்த்தையைக் கேட்பதால் வருகிறது. (ரோமர் 10 : 17 விசுவாசத்தினால் மாத்திரம் ஒருவன் இரட்சிப்படைய முடியாது. (யாக் 2 : 14, 17; 19 24-26 சர்வ வல்லமையுள்ள தேவனுக்குக் கீழ்படியத் தக்கதாக விசுவாசம் ஒருவனை வழி நடத்தும் போது அந்த விசுவாசத்தால் அவன் இரட்சிக்கப்படுகிறான். (ரோமர் 5;1-2; 6 : 3 -4) கிரியையில்லாத விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்படைய முயற்சிப்பது "செத்துப் போன பிணத்தை நடமாடச் செய்யும் முயற்சிக்கு ஒப்பாகும். (யாக் 2.26)

இயேசுவின் நாமத்தை அறிக்கையிடுதல் மற்றுமோர் தேவனின் கட்டளையாகும்."மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத் 10 : 32 -33) இயேசுவை"அறிக்கையிடுதல்" என்றால் அவருடைய நாமத்தை அறிக்கையிடுவதாகும். நமது அனுபவங்களையோ, உணர்ச்சிகளையோ அல்ல. "இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்" என எத்தியோப்பிய மந்திரி அறிக்கையிட்டான். (அப் 8 : 37) இயேசுவை அறிக்கை செய்தல் எவ்வளவு முக்கியமென்று நமக்குக் காட்டுகிறது (ரோமர் 10:9, 10) வசனங்கள், "இயேசுவின் பெயரால் தேவன் என் பாவங்களையெல்லாம் மன்னித்து விட்டதாக நான் உணருகிறேன்" என யாராவது அறிக்கையிட்டதாக சுவிசேஷத்தில் எங்கும் காண முடியாது.

மனந்திரும்ப வேண்டுமென எல்லா மக்களுக்கும் தேவன் கட்டளையிட்டிருக்கிறார். (அப் 17 : 30 31) மனந்திரும்புதல் என்றால் என்ன? ஒரு புதிய நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானிப்பதே மனந்திருப்புதலின் விளைவாகும். பாவத்திலிருந்து விடுபட்டு, தேவனை நோக்கித் திரும்புதலே நாம் குறிப்பிடும் மனமாற்றத்தில் ஏற்படும் செயலாகும். மனந்திரும்புதல் பற்றி மத்தேயு 21ம் அதிகாரம் 28, 29 வசனங்கள் அருமையாக சித்தரிப்பதை நாம் காணமுடியும். அந்த வசனங்களை வாசித்துப் பாருங்கள். பாவ மன்னிப்புக்குள்ள நிபந்தனைகளில் மனந்திரும்புதலும் ஒன்றாகும். (லூக். 13 : 3; அப். 2: 38, 3, 19) கீழ்ப்படிய மிகக் கடுமையான கட்டளைகளில் மனந்திரும்புதல் பிரதானமானது. ஏனெனில் இது மனித விருப்பு சம்பந்தப்பட்டது. தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள பலர் விரும்புவதே இல்லை. ஆனால் மனிதர்களை நம்ப வைப்பதற்காக வேஷம் போடுவார்கள். மெய்யாய் மனஸ்தாபப்பட்டு வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் குறிப்பிட விரும்பும் கடைசி கட்டளை ஞானஸ்நானம் ஆகும். "கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்". (அப்.10:48) "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16). " ........ சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" அப். 2.37-38 ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய மரணத்துக்குள்ளும் நடத்தி, இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் அவன் பாவங்கள் கழுவப்படச் செய்கிறது. (dhx 22 : 16 ; ரோமர் 6 : 3 -4).

அருமையான வாசகரே! தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் இடறலடையாதீர்! நன்று என்பதை இன்றே செய்வீர்! அப் 16 :33; IIகொரி 6 : 2 வசனங்களை சிந்திப்பீர்!

**W.A. ஹாலி**

## ரெபெக்காள்

முதிர் வயதில் பார்வை இழந்த ஈசாக்கின் மனைவி ரெபெக்காவுக்கு ஏசா, யாக்கோபு என்ற புத்திரர்கள். தான் அதிகமாக நேசிக்கும் இளையகுமாரன் யாக்கோபுவுக்கு தலைச்சன் (சிரேஷ்ட புத்திர) ஆசீரைப் பெற்றுத் தர தாயார் ரெபெக்காள் தீட்டும் ஏமாற்றுத் திட்டத்தில் வீழ்ந்து போகிறார் ஈசாக்.

சகோதரிகளே, நம் குடும்பங்களில் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் ஏமாற்ற நாம் துணைபோகிறோமா? வேண்டாம் இந்த பிரிவினை வேலை.

# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

சத்தியம் நம்மை விடுதலை யாக்கும் என இயேசு கூறுகிறார். (யோவான் 8 : 32) என்றாலும், நாம் சத்தியத்தை அறிவதால் மட்டுமே விடுதலைய டைவதாக திடமாகக் கூறுகிறார். "நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள் : சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்". ஆன்மீகம், உலக வாழ்க்கை, விஞ்ஞானம், சட்டம், அரசியல், மருத்துவம் போன்ற வாழ்வின் எந்த நிலைக்கும் இந்த சித்தாந்தம் பொருந்துவதாக இருக்கிறது. எந்த நிலையிலுள் ளவரையும் சத்தியம் விடுதலைக்கு அழைத்துச் செல்கிறது. தேவனு டைய ஆவிக்குரிய சத்தியம் பதிவு செய்யப்பட்டுள்ள பரிசுத்த வேதா கமத்தைப் படிக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. அப்போது தான் ஆவிக்குரிய விடுதலையை நாம் பெற்றவர்களாவோம்.

இதில் தவறிப் போனவர் களைப் பற்றிய உதாரணங்கள் வேதாகமத்தில் நிறைந்து காணப் படுகின்றன. கள்ளப் போதகர் களையும் அவர்களின் தவறான வழிகளையும் அறிந்த அப்போஸ் தலனாகிய பவுலின் அனுப வங்கள், அவர்கள் எவ்வாறு தவறில் கட்டுண்டு கிடக்கிறார்கள் என்ப தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

"குமாரனாகிய தீமோத் தேயுவே, உன்னைக் குறித்து முன் உண்டான தீர்க்க தரிசனங்களின் படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம் பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக் கிறேன்; நீ விசுவாசமும் நல் மனச்சாட்சியும் உடைய வனாயிரு, இந்த நல் மனச் சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப் படுத்தினார்கள். இமெனேயும் அலெக்சாந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர் களைச் சாத்தா னிடத்தில் ஒப்புக் கொடுத்தேன்". (I தீமொத் 1 : 18 -20)

அலெக்சாந்தர் அக்காட்சி யினின்று மறைந்துவிட்ட போதிலும், இமெனேயுவின் கெட்ட செயல்கள் தொடர்ந்தன. பவுல் தீமோத்தேயுவை மீண்டு மாக எச்சரிக்கிறார். நீ வெட்கப் படாத ஊழியக் காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாத உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு, சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப் போதகர் களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள். அவர்களுடைய வார்த்தை அரி பிளவையைப் போலப் படரும்; இமனேயும் பிலேத்தும் அப்படிப் பட்டவர்கள்; அவர்கள் சத்தியத்தை விட்டுவிலகி, உயிர்த் தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவா சத்தைக் - கவிழ்த்துப் போடுகிறார்கள்". (II தீமொத் 2 : 15 - 18).

தவறை எதிர்த்து நின்று அதன் முகமூடியைக் கிழித்தெறி வதைத் தவிர, இயேசுவின் ஊழியக் காரனாகிய பவுலுக்கு வேறு மார்க்கம் இல்லை. இதற்கு மாறாக, எதைச் செய்தாலும், அது "சத்தியத்துக்கு நிரந்தர சமாதி கட்டுவதாகவும், தவறை நிரந்தரமாக அரியணையில் அமர்த்துவதாகவும் தான் முடியும் "(ஜேம்ஸ்ரஸ்ஸல் லோவெல்) பவுல் மீண்டுமாக எச்சரிக்கிறார்;

புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும் போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும் புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந் தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்". (II தீமொத் 2 : 23 -26).

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக் கேற்ற போதகர்களைத் தங்களுக் குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்க நுபவி, சுவிசேஷக னுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று". (2 தீமொத் 4 : 2 -5)

"சத்தியமே உங்களை விடுதலையாக்கும்".

**டேவிட் வேடே**

## நாம் என்ன பெயரைத் தரித்துக் கொள்ள வேண்டும்?

1) **கிறிஸ்தவன் :** "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர் களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப் 11 : 26)

2) **கிறிஸ்தவன் :** "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்." I (பேது 4 16)

3) **கிறிஸ்தவன்:** "அப்பொழுது, அகிரிப்பா பவுலை நோக்கி நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்" (அப் 26 : 28)

## நாம் ஏன் இன்று கிறிஸ்தவனாக மாறக் கூடாது?

# கிறிஸ்தவம் தழைத்தோங்க தடையென்ன?

கிறிஸ்துவின் ஊழியக்காரனாக விளங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைவதை மனிதன் அறிந்தபோதிலும், கிறிஸ்து அள்ளித்தரும் அளவற்ற ஆசிர்வாதங்களை அடைய ஆர்வமற்ற மக்கள் பலரை சந்திக்கும் போது "இவர்களை தடை செய்யும் சக்தி யாது?" என்ற வினாவுக்கு விடைகாண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

***சத்திய வழியை அடைத்து, தவறான பாதைக்கு திசை திருப்பும் கள்ள போதகர்கள்***

இது பற்றி வேதாகமத்தில் நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். "கள்ளத்தீர்க்கத்தரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக் கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்' - 11பேதுரு 2 : 1. "அவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" - மத் 15 : 14

***சிற்றின்பத்தை சிறிது நேரம் தரும் பாவப்படுகுழியில் விழுந்து கிடக்கும் பரிதாப நிலையில் பலர்***

பாவத்தில் இன்பமில்லை என்று சொன்னால் அது பொய்! ஆம். பாவத்தில் இன்பமுண்டு, ஆனாலும் பாவம் தரும் இன்பம் நொடிப் பொழுதிலே மறைந்து போகிறது (எபி 11-24,25) இக்குறுகிய கால இன்பத்தால் இழுக்கப்பட்ட பலர் தேவனை விட்டு விலகிப் போகின்றனர் "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்" -மத். 13 : 23

***கால தாமதத்தால் கிறிஸ்துவின் கருணையை புறக்கணித்து கரை சேராத மக்கள்***

ஆத்தும இரட்சிப்பின் அவசியம் பற்றி என்னிடம் அறிவுரை பெற்ற மக்கள் அநேகருண்டு. தேவனுடைய திட்டத்தை அவர்கள் அறிவார்கள். அதை நடைமுறைப்படுத்தவும் அவர்களிடம் திட்டம் உண்டு. ஆனால் அதற்கான 'நல்ல நாள்' இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்பதே வேதனையான காரியம். என்றாலும் தேவனுடைய வசனத்தின்படி "இதோ இப்பொழுது அநுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சண்யநாள் "- (2 கொரி 5 : 2) இன்றே செயல்படுவீர் ஏனெனில் நாளை நமது நாள் அல்ல!

**ஜெரி பாபர்** — **தமிழில் S.S. ராஜன்.**

# நற்செய்தியைப் போதிப்போம்

உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டார். (மாற்கு 16 : 15). "சத்திய வசனமும் இரட்சிப்பின் நற்செய்தியு மான (எபி 1 : 13)" "வசனத்தை மட்டும் போதிக்க" (2 தீமோ 4 : 2) பிற போதகர்களிடம்அப்போஸ்தலர்கள்எச்சரித்தனர்.

கலப்படமற்ற சத்திய வசனங்களின் எளிய போதனைகள் பிரமிக்கத்தக்க முடிவுகளை விளைவித்தன. தற்காலத்தைப் போல் இல்லாமல், முதல் நூற்றாண்டு போதகர்களுக்கு போக்குவரத்து வசதிகளோ ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் வசதிகளோ மிகவும் கடினமாக இருந்தன. அப்போஸ்தலர் யோவானின் மரணத்திற்கு முன், ரோமப் பேரரசில் ஏறத்தாழ 60 லட்சம் கிறிஸ்தவர்கள் இருந்ததாக ஒரு அவிசுவாசியே ஒப்புக் கொண்டுள்ளார்.

வசனங்களை தங்கள் வசதிக்கேற்ப வளைத்துக் கொள்ளும் நூறு மத போதகர்களின் சாதனைகளைவிட, கர்த்தருடைய வசனத்தை, கூட்டாமலும் அல்லது குறைக்காமலும், அப்படியே போதிக்கும் ஒரு நல்ல மனிதன் உண்மையிலேயே அதிகமான நற்சாதனைகளைப் படைப்பவனாக விளங்குவான். மனிதனுடைய தத்துவம் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை ஒரு ஆத்துமாவைக் கூட இரட்சித்ததில்லை. கிறிஸ்துவின் "நற்செய்தியோ இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது" (ரோமர் 1 : 16) எனவே "லௌகீக ஞானத்திலும், மாயமான தந்திரத்திலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (கொலோ 2 : 8). "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்" (1 கொரி 2 : 2) அதே சிறந்த தீர்மானத்தை நாமும் வாழ்வில் ஏற்றுக் கொள்வோம்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டா திருப்போமாக". (கலா 6 : 14)

**G.F. Rainis** **G.F. ரெய்ன்ஸ்**

YOUR ATTENTION PLEASE

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**

The voice of Truth-Speaker: J.C. Choate,
The Voice of Truth, Post Box 3815, New Delhi-110 049
Fridays - 7:45 to 8:00 P.M.

**HINDI**

Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susamachar, Post Box 3815, New Delhi-110 004
Tuesdays - 9:00 to 9:15 P.M.
Fridays - 9:00 to 9:15

**TELUGU**

The Voice of Truth-Speaker; Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinda 533 001

| | |
|---|---|
| Tuesdays - | 2:00 to 2:15 P.M. |
| Thursdays - | 2:15 to 2:30 P.M. |
| Fridays- | 2:15 to 2:30 P.M. |

**TAMIL**

The Way of Truth-Speaker: P.R. Swamy.
The Way of Truth, Post Box 8405, Bangalore 560 084
Sundays - 6:45 to 7:00 P.M.
Thursdays - 6:45 to 7:00 P.M.

**MALAYALAM**

The Voice of Truth-Speaker: P.K. Varghese
Church of Christ, Sunny Meads Lane, Trivandrum-34 (Kerala)
Fridays - 3:15 to 3:30 P.M.

**KANNADA**

The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box 448, Bangalore 560 004
Sundays - 1:45 to 2:00

**ALL ARE ENCOURAGED TO LISTEN**

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the address listed. Also the radio sermons are available in book form.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20, May 1994
MAY 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10 மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
**E.Z.S. ராஜநாயகம்**
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode.
**Editor E.Z.S. Rajanayagam**

If undelivored Please return to
The Editor
**THIRUMARAI AASAAN**
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST